**2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூட்டத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

## முன்னிலை : திருமதி. ஆர். ஜானகி.

### பொருள் எண்.1

சத்தியமங்கலம் நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வரும் திரு.வ. செல்வம் அவர்களது செப்டம்பர்- 2023 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.986/2023/சி1)

### பொருள் எண்.2

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பணிக்குத் தேவையான தளவாட சாமான்கள் 2023-2024 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விவரப்படி வாங்கி வழங்கவும் பொருட்களை வாங்குவதற்காகும் உத்தேச செலவினம் ரூபாய்.1,30,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பொருட்கள் விவரம் | அளவு மற்றும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்வெட்டி (பெரியது) | 45 எண்ணிக்கை |
| 2 | மண்வெட்டி (சிறியது) | 30 எண்ணிக்கை |
| 3 | சவுல் | 15 எண்ணிக்கை |
| 4 | குப்பை அன்னம் அலுமினிய குண்டா | 15 எண்ணிக்கை |
| 5 | டிச்சி கொக்கி | 60 எண்ணிக்கை |
| 6 | சாலையோர மண் கூட்டும் சீமார் | 100 எண்ணிக்கை |
| 7 | மூங்கில் கை சீமார் | 100 எண்ணிக்கை |
| 8 | பைபர் சட்டி | 100 எண்ணிக்கை |
| 9 | பல் கொத்து (சிறியது) | 60 எண்ணிக்கை |
| 10 | பல் கொத்து (பெரியது) | 20 எண்ணிக்கை |
| 11 | மூங்கில் கூடை (பெரியது) | 30 எண்ணிக்கை |
| 12 | மூங்கில் கூடை (சிறியது) | 30 எண்ணிக்கை |
| 13 | அருவாள் (பெரியது) | 30 எண்ணிக்கை |
| 14 | அருவாள் (சிறியது) | 45 எண்ணிக்கை |
| 15 | வீச்சு அருவாள் | 45 எண்ணிக்கை |
| 16 | கடப்பாரை | 12 எண்ணிக்கை |
| 17 | வலையுடன் கூடிய டிச்சு கொக்கி | 12 எண்ணிக்கை |

அலுவலக குறிப்பு :-

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1999/2023/எச்-1)

## பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் 19.09.2023 அன்று காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின் படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பிரிவுக்கு தேவையான கீழ்க்கண்ட கிருமிநாசினிகள் தேவைப்படுகின்றன.

| வ எண் | பொருள் | அளவு |
|---|---|---|
| 1 | பைரத்திரம் 2% Extract | 40 லிட்டர் |
| 2 | அபேட் | 40 லிட்டர் |
| 3 | B T லிக்விட் | 50 கிலோ |

மேற்கண்ட பொருட்களை பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மருந்துவ சேவைகள் கார்ப்பரேஷன் அங்ககாரம் பெற்ற நிறுவனத்திடம் பெற்றுகொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,35,000/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேலும் இச்செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3)பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்காலம்.

(ந.க.எண். 2004/2023/எச்-1)

## பொருள் எண்.4

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றி வரும் தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதி உள்ள பணியாளர்களுக்கும் 2023-24 ஆம் ஆண்டு வருடாந்திர சீருடை துணிகள், காலணிகள் வாங்கவும் மற்றும் தையல் கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூபாய்.4,00,000/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்கண்ட சீருடையை தமிழ்நாடு அரசு நிறுவனமான கோ- ஆப்- டெக்ஸ் நிறுவனத்திலும், காலணிகளை தமிழ்நாடு அரசு நிறுவனமான காதி கிராப்ட் நிறுவனத்திலும் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1972/2023/எச்1)

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாக கடை எண் . 5,9,10,12,13,15. ஆகிய கடை உரிமைதாரர்கள் உரிமைக்காலம் 31.08.2023 வரை முடிவு பெற்றுள்ளதால், அதனை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து வழங்க கேட்டுக் கொண்டுள்ளனர். மேற்படி கடைகளுக்கான வாடகை தொகை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர் எனவே அரசாணை 92-ன் படி மூன்றாவது முறையாக மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்தை நீடித்தும் பழைய வாடகை தொகையிலிருந்து 15% சதவீதம் கூடுதலாக உயர்த்தி வாடகை வசூலித்துக் கொள்ளவும் 01.09.2023 .முதல் 31.08.2026 வரை மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) வாரச்சந்தை வணிக வளாக கடை எண் . 5,9,10,12,13,15. ஆகிய கடைகளுக்கான 01.09.2023 முதல் 31.08.2026 வரை மூன்றாண்டு காலத்திற்கு 15% வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கலாம்.

2) மேலும் உரிமம் புதுப்பித்து வழங்குவதற்கு ஏற்படும் வித்தியாசத் தொகையினை வசூலித்து வைப்பு நிதியில் வைக்கலாம்.

3) நகராட்சியின் பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அவ்வப்பொழுது ஏற்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுத்தி ஆணை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1200/2020/அ3)

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடைகள் கடை எண் .2,3,4,5,6,7,8,9,10,15A,16,41,42A,42B,43,45,53. ஆகிய கடை உரிமைதாரர்கள் உரிமைக்காலம் 31.08.2023 வரை முடிவு பெற்றுள்ளதால், அதனை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து வழங்க கேட்டுக் கொண்டுள்ளனர். மேற்படி கடைகளுக்கான வாடகை தொகை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர், எனவே அரசாணை 92-ன் படி மூன்றாவது முறையாக மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்தை நீடித்தும் பழைய வாடகை தொகையிலிருந்து 15% சதவீதம் கூடுதலாக உயர்த்தி வாடகை வசூலித்துக் கொள்ளவும் 01.09.2023 .முதல் 31.08.2026 வரை மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) புதிய பேருந்து நிலைய கடைகள் கடை எண் . 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 15A, 16, 41, 42A, 42B,43,45,53. ஆகிய கடைகளுக்கான 01.09.2023 முதல் 31.08.2026 வரை மூன்றாண்டு காலத்திற்கு 15% வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கலாம்.

2) மேலும் உரிமம் புதுப்பித்து வழங்குவதற்கு ஏற்படும் வித்தியாசத் தொகையினை வசூலித்து வைப்பு நிதியில் வைக்கலாம்.

3) நகராட்சியின் பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அவ்வப்பொழுது ஏற்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுத்தி ஆணை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1200/2020/அ3)

## பொருள் எண்.7

15.09.2023 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளியில் பொது ஏலத்திற்கு ஒருவரும் கலந்து கொள்ளவில்லை, மேற்படி கடைகளுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு ஒரே ஒரு ஒப்பந்த புள்ளி மட்டும் வழங்கியுள்ளதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | கடை எண் | கடையின் விவரம் | ஒப்பந்தம் வழங்கியவர் | பழைய வாடகை ரூ. | சந்தை மதிப்பு ரூ. | PWD மதிப்பு ரூ. | குழு மதிப்பு ரூ. | கோரப்பட்ட வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 22B | பு.பே. நி. கடை | சரண் | 11,615/- | 5,570/- | 7,150/- | 9,000/- | 10,100/- |
| 2. | 24 | பு.பே. நி. கடை | ஜுனைத் | 13,490/- | 5,570/- | 7,150/- | 9,000/- | 11,000/- |
| 3. | 32 | பு.பே. நி. கடை | ரஜியா பானு | 17,986/- | 5,570/- | 7,150/- | 9,000/- | 23,500/- |
| 4. | 33 | பு.பே. நி. கடை | T.K சர்புதீன் | 14,030/- | 5,570/- | 7,150/- | 9,000/- | 18,902/- |
| 5. | 48 | பு.பே. நி. கடை | அந்தோணி ராஜேஷ் | 13,357/- | 5,570/- | 7,150/- | 9,000/- | 11,000/- |
| 6. | 20 | சத்திர கடை | பொன்னுசாமி | --- | 5,570/- | 7,150/- | 2,500/- | 3,200/- |
| 7. | 33 | சத்திர கடை | மணிகண்டன் | 5,050/- | 5,570/- | 7,150/- | 2,500/- | 7,000/- |

அலுவலக குறிப்பு:

1) வரிசை எண் 1 முதல் 7 வரை பழைய வாடகையை காட்டிலும் குறைவாகவும் சந்தை மதிப்பு பொதுப்பணி துறை மதிப்பு மற்றும் குழு மதிப்பைவிட அதிகமாகவும் கேட்டுள்ளதால் நகராட்சி நிதி இழப்பை கருத்தில் கொண்டு மன்றம் முடிவு செய்யலாம்.

2) அரசணை எண் 92 மற்றும் நகராட்சி பொது ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டும் ஏலத் தொகையை உறுதி செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண் 1200/2020/அ3)

## பொருள் எண்.8

சத்தியமங்கலம் நகராட்சியில் வருவாய், குடிநீர் மற்றும் குடிநீர் நிதியில் பல்வேறு பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு கடந்த 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளன.

1) வேலையின் பெயர்- வார்டு எண்.12 சத்தியா தியேட்டர் பகுதியில் புதிய ஆழகுழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் செய்தல் .

மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சம் .

2) வேலையின் பெயர்- சத்தியமங்கலம் நகராட்சி குப்பை கிடங்கில் மூங்கில் மரம் மற்றும் சொட்டு

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.2,48,490/- | 0.44 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம். | ரூ.2,50,353/- | 0.31 சதவீதம் அதிகம் |

நீர்பாசன வசதிகள் செய்தல்.

மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சம் .

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ் , ஒப்பந்ததாரர் , பவானிசாகர் . | ரூ.1,68,972/- | 0.11 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம் . | ரூ.1,68,230/- | 2.48 சதவீதம் அதிகம் |

3) வேலையின் பெயர்- வார்டு எண்.8 சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் பழுது பார்த்தல்.

மதிப்பீடு தொகை ரூ.4.55 இலட்சம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் , பவானிசாகர் . | ரூ.3,57,194/- | 5.96 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம் . | ரூ.3,83,700/- | 1.02 சதவீதம் அதிகம் |

4)வேலையின் பெயர்- சத்தி-1நகராட்சி நடுநிலைப்பள்ளி சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை ரூ.4.60 இலட்சம் .

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம் . | ரூ.3,82,641/- | 0.10 சதவீத ம் குறைவு |
| 2 | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ் , ஒப்பந்ததாரர் , பவானிசாகர் . | ரூ.4,02,768/- | 5.15 சதவீதம் அதிகம் |

5) வேலையின் பெயர்- வார்டு எண். 17 இல் மழைநீர் வடிகால் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை ரூ.4.85 இலட்சம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.4,04,769/- | 0.19 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.4,06,066/- | 0.13 சதவீதம் அதிகம் |

6) வேலையின் பெயர்- பேருந்து நிலையத்தில் உள்ள பழைய மழை நீர் வடிகால் மற்றும் கழிப்பிடம் பழுது பார்த்தல்.

மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். சத்தியமங்கலம். | ரூ.1,66,972/- | 0.21 சதவீதம் குறைவு |
| 2 | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், பவானிசாகர். | ரூ.1,70,920/- | 2.15 சதவீதம் அதிகம் |

7) வேலையின் பெயர்- வார்டு எண்.2 நாடார் காலணியில் மின் மோட்டார் அறை கட்டுதல்.

மதிப்பீடு தொகை ரூ.0.50 இலட்சம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.38,422/- | 2.90 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.40,569 /- | 2.52 சதவீதம் அதிகம் |

8) வேலையின் பெயர்- வார்டு எண்.5 கட்டபொம்மன் நகரில் உள்ள ஒருங்கிணைந்த சமையற் கூட வளாகத்தில் கேஸ் பைப்லைன், கொசு வலை, தீயணைப்பு சாதனங்கள், ஸ்டீல் ரேக், ACP Material Sticker, Foam Board, Square Frames போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை ரூ.3.90 இலட்சம்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ் , ஒப்பந்ததாரர் , பவானிசாகர் . | ரூ.3,24,800/- | 0.06 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம் . | ரூ.3,31,700 /- | 2.06 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட அட்டவணையின்படி வ.எண்.2,3,8 மட்டும் மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் ,பவானிசாகர், வ.எண்.1,5,7 மட்டும் திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம், வ.எண்.4, 6 மட்டும் திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் , சத்தியமங்கலம் அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கி உள்ளார்கள். எனவே, இப்பணி முக்கியத்துவம் கருதி பணி ஆணை வழங்கப்பட்டமைக்கும், பணி தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

## பொருள் எண்.9

சத்தியமங்கலம் நகராட்சி வார்டு எண்.3 குள்ளங்கரடு பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் அடிக்கடி புகார்கள் தெரிவித்து வந்துள்ளார்கள். மேலும், குடிநீர் தேவைக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. பொதுமக்களின் நலன் கருத்தில் கொண்டும் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அவசர அவசியம் கருதி புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்க உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

### பொருள் எண்.10

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பத்திரகாளியம்மன் கோவில் வீதி மற்றும் கோவிந்தராஜபுரம் வீதியில் சாலை சீரமைக்க 15 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தார் சாலை அமைக்கும் பணிக்கு மட்டும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், சாலையில் உறுதியான கட்டமைப்பு தன்மை இல்லாததால் சாலை சீரமைக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட இரண்டு சாலையில் உலர் கலவை (WMM) போட வேண்டும். இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

### பொருள் எண்.11

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட குறிப்பில் வடகிழக்கு பருவ மழை எதிர் கொள்ளும் பொருட்டு குடிநீர் விநியோகம், சாலை சீரமைப்பு, பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ள வேண்டும், உரிய முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். எனவே, சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திப்புசுல்தான் ரோடு, சத்தியா தியேட்டர் ரோடு மற்றும் இதர பகுதியில் பருவ மழையால் சாலை சேதம் ஏற்பட்டு சாலை குண்டு குழியுமாக உள்ளது. இதனால் சாலையில் அடிக்கடி சிறு விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. எதிர் வரும் மழை காலங்கள் சமாளிக்கும் பொருட்டு சாலை சீரமைப்பது அவசியம் ஆகும். இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 4.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

### பொருள் எண்.12

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 1 ஆண்டவர் நகர் பகுதியில் முறையான சாக்கடை வசதிகள் இல்லாததால் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சாலையில் செல்கிறது. இதனால் தேங்கி இருக்கும் கழிவுநீரால் அடிக்கடி காய்ச்சல் பரவி வருவதாக அந்த பகுதி பொதுமக்கள் புகார்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, சுகாதார சீர்கேடு தவிர்க்கும் பொருட்டு மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.3.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண்.13**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 3 ராஜீவ் நகர் மற்றும் மூனு வீடு பகுதியில் முறையான சாக்கடை வசதிகள் இல்லாததால் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சாலையில் செல்கிறது. இதனால் தேங்கி இருக்கும் கழிவுநீரால் அடிக்கடி காய்ச்சல் பரவி வருவதாக அந்த பகுதி பொதுமக்கள் புகார்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, சுகாதார சீர்கேடு தவிர்க்கும் பொருட்டு மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.3.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.548/2022/இ1)

அலுவலக குறிப்பு :
மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

சத்தியமங்கலம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள், பள்ளி கூடங்கள், சந்தை , தினசரி மார்க்கெட் மற்றும் இதர அசையா சொத்துகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பொருட்டு மூல மதிப்பீடுகளில் வழிவகை செய்யப்படாதால் தனியாக மதிப்பீடு தயாரிக்க வேண்டியுள்ளது. எனவே, கழிவுநீர் மேலாண்மை (Liquid Waste Management) முற்றிலும் செயல்படுத்தும் பொருட்டு நகராட்சியின் சொத்துகளுக்கு பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்க உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கும், பணிகள் தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண். 548/2022/இ1)

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.15**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் 77.561 கி.மீ நீளத்திற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 8089 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு உட்பட்ட Zone-I ரங்கசமுத்திரம் மேல்நிலைத் தொட்டி விநியோக பகுதியில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெறும் பொழுது தனியார் வீட்டு குழாய் இணைப்பு மற்றும் பிரதான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த உடைப்புகள் அவ்வப்போது சரி செய்ய இயலாத ஒன்றாகும். மேலும், இந்த வார்டு பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் இணைக்கும் பொருட்டு பல தடவை உடைப்பு ஏற்படுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக உடைப்புகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.90 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில்

மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கும், பணிகள் தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண். 548/2022/இ1)

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.16

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் 77,561 கி.மீ நீளத்திற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 8089 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு உட்பட்ட Zone-II கட்டபொம்மன் நகர் மேல் நிலைத் தொட்டி விநியோக பகுதியில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெறும் பொழுது தனியார் வீட்டு குழாய் இணைப்பு மற்றும் பிரதான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களின் குறிப்பில் தெவித்துள்ளார்கள். எனவே, இந்த உடைப்புகள் அவ்வப்போது சரி செய்ய இயலாத ஒன்றாகும். மேலும், இந்த வார்டு பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் இணைக்கும் பொருட்டு பல தடவை உடைப்பு ஏற்படுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக உடைப்புகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கும், பணிகள் தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண். 548/2022/இ1)

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.17

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் 77,561 கி.மி நீளத்திற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 8089 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு உட்பட்ட Zone-III திருவள்ளுவர் திடல் மேல் நிலைத் தொட்டி விநியோக பகுதியில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெறும் பொழுது தனியார் வீட்டு குழாய் இணைப்பு மற்றும் பிரதான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களின் குறிப்பில் தெவித்துள்ளார்கள். எனவே, இந்த உடைப்புகள் அவ்வப்போது சரி செய்ய இயலாத ஒன்றாகும். மேலும், இந்த வார்டு பகுதியில் அம்ரூத் 2.O திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் இணைக்கும் பொருட்டு பல தடவை உடைப்பு ஏற்படுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக உடைப்புகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கும், பணிகள் தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண். 548/2022/இ1)

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.18

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 77,561 கி.மி நீளத்திற்கு புதிதாக குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 8089 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 1 முதல் 22 வரை உள்ள பகுதியில் இப்பணி மேற்கொள்ளும்போது பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏறபட்டு கழிவுநீர் வீட்டு இணைப்பில் இருந்து கசிவு ஏற்பட்டு சாலையில் சென்று விடுகிறது. இதனால் கழிவுநீர் அதிக அளவில் தேங்கி பல பிரச்சனைகள் ஏற்படுகிறது. இந்த உடைப்பு அவ்வப்போது சரி செய்ய இயலாத ஒன்றாகும். மேலும், இந்த வார்டு பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் இணைக்கும் பொருட்டு பல தடவை உடைப்பு ஏற்படுகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக உடைப்புகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.75 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கும், பணிகள் தொடங்கப்பட்டமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண். 548/2022/இ1)

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.19

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்ட வரும் குடிநீர் டேங்கர் லாரி TN 36 AZ8821 வாகனம் வரும் 28.09.2023 நாளுடன் தகுதிகாண் சான்று (Fitneess Certificate) முடிவு பெறுவதை தொடர்ந்து வண்டியில் பெய்ண்டிங், ஆயில் சர்வீஸ், மற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஓட்டுநர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பணியின் முக்கியத்துவம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தில் சர்வீஸ் செய்ய உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2022 பிரிவு எண்.57(7) இன்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.1336/2023/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.20

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் 5 வது மாநில உயர் மட்ட குழு கூட்டத்தில் 2023-2024 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ரூ.24.96 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி மத்திய அரசு பங்கு தொகை 50 சதவீதம், மாநில அரசு பங்கு தொகை 33 சதவீதம் மற்றும் நகராட்சி பங்கு தொகை 17 சதவீதம் என்ற விகிதாசாரத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, கீழ்கண்ட பணியினை மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இத்திட்டத்தில் நகராட்சி பங்கு

தொகை ரூ.4,24,320/- ஐ வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண்.11 எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் . | ரூ.24.96 இலட்சம் |

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம் .

2)மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.737/2022/இ1)

## பொருள் எண்.21

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்ட வரும் குடிநீர் டேங்கர் லாரி TN 36 AZ8821 வாகனத்தின் டயர்கள் தேய்து வெடிக்கும் நிலையில் உள்ளது. இதனால் வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. இந்த வாகனத்திற்கு புதிய டயர்கள், பேட்டரி, மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு.எஸ்.கே.பழனிசாமி ஓட்டுநர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு நிறுவனத்தில் வாகனம் பழுது பார்க்கும் வகையில் உத்தேச செலவினம் ரூ.1.10 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.1336/2023/இ1)

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம் .

2)மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.22

சத்தியமங்கலம் நகராட்சியில் புதிதாக ஈப்பு வாகனம் வாங்கப்பட்டது. இந்த வாகனம் போக்குவரத்து துறையிடம் நிரந்தர பதிவு செய்யப்பட்டது. இந்த வாகனத்தில் கூடுதல் பணிகளான எலக்ட்ரிக்கல் பணி, சீட் கவர், மேட் மற்றும் இதர கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து பணிகளையும் கோவை Koyas , Auto Machinery Eqipment Company, Ameco Liners போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாகனத்திற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.579/2022/இ1)

அலுவலக குறிப்பு :

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் முக்கியத்துவம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டமைக்கும், பட்டியல் தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

## பொருள் எண்.23

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8880/2022/தி 2 நாள்.01.08.2023 இன்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு எண். 10 பாசக்குட்டை பகுதியில் சிறுபாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.6.60 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், (பொ), மண்டல செயற் பொறியாளர், திருப்பூர், அவர்களின் செயல்முறை ஆணை ந..களஎண்.4299/2022/பி1 நாள். 14.08.2023 இன்படி மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 31.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டுஎண்.10 பாசக்குட்டை பகுதியில் சிறுபாலம் கட்டுதல். | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், ,சத்தியமங்கலம். | 0.05 சதவீதம் அதிகம் | ரூ.5,38,805/- |
| | | மெர்ஸ்.வினோ , கன்ஸ்ட்ரக்சன்ஸ் , பவானிசாகர். | 0.18 சதவீதம் குறைவு | ரூ.5,37,520/- |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது, குறைவான ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ் , பவானிசாகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்ககப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்,901/2021/இ1)

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.24

இந்நகராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உதவி பொறியாளர் பணியிடத்திற்கு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார், அவருக்கு அறை இல்லாததால் பொறியியல் பிரிவில் தனி அறை ஒதுக்கீடு செய்யப்பட்டது . எனவே, பொறியியல் பிரிவு தேவையான வர்ணம் பூசுதல், டேபிள், சேர் மற்றும் இதர வசதிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.548/2022/இ1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**சத்தியமங்கலம்**
**நாள் : 22.9. 2023**

**நகர்மன்ற தலைவர்.**
**சத்தியமங்கலம் நகராட்சி.**